3. அறிவிப்பு

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9(1)-ன்கீழ் கீழ்க்காணும் உறுப்பினர்களைப் பேரவையின் 8-வது கூட்டத் தொடருக்கான மாற்றுத் தலைவர்களாக* (Panel of Chairmen) *நியமிக்கிறேன்.*

1) திரு. அ. பாப்பா சுந்தரம்

2) திரு. ஓ.கே. சின்னராஜ்

3) திரு. கே.பி. அன்பழகன்

4) திரு. ஆர். சின்னசாமி

5) திரு. பி.ஜி. நாராயணன்

6) திரு. சு. குணசேகரன்

4. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை முன்மொழிதல். மாண்புமிகு உறுப்பினர் திரு. கு.வ. மார்க்கண்டேயன் அவர்கள்.*

திரு. கு.வ. மார்க்கண்டேயன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

“2014 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 30 ஆம் நாளன்று சட்டமன்றப் பேரவைக்கு மேதகு ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு@ தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர்”

என்னும் தீர்மானத்தை நான் முன்மொழிகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *தீர்மானத்தை வழிமொழிதல். மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.எஸ்.என். நடராஜ் அவர்கள்.*

@ 150 முதல் 184 வரையிலான பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.